இருக்கின்றன. அதே சமயத்திலே சங்ககிரி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியிலே 8 கிராமங்கள் இருக்கின்றன. இரண்டையும் பார்க்கிறபோது, 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இந்தப் பகுதியிலே வசிக்கிறார்கள். ஆகவே, இரண்டு தொகுதியை உள்ளடக்கிய மையப் பகுதியாக கோனேரிப்பட்டி இருக்கிற காரணத்தினாலே இந்தப் பகுதியிலே புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க மறுபரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி ஒன்றியத்திற்கு உட்பட்ட அளவிலே தான் நான் கணக்கு சொன்னேன். ஆனால், சங்ககிரி ஊராட்சி ஒன்றியம் எவ்வளவு மக்கள் தொகை என்று கணக்கு எடுத்துப் பார்த்தால் அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறதா என்பதை பார்த்தால் அங்கேயும் அது சரியாகத்தான் இருக்கும் என்று நம்புகிறேன். கணக்கு இப்பொழுது என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைச் சொல்கிற காரணத்தினால் இரண்டு ஒன்றியத்தையும் கணக்கு எடுத்து எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன, மேலும் அமைக்கக்கூடிய சாத்தியக்கூறு இருக்கிறதா என்பதைப் பார்த்து, அப்படிப்பட்ட சாத்தியக்கூறு இருந்தால் இந்த இடத்திலே அமைப்பது பற்றி நிதி நிலைமைக்கு ஏற்ப எதிர்காலத்திலே நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 264, திரு. உ. பலராமன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக டாக்டர் எஸ். சுந்தரராஜ் கேட்கிறார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

264—

நோய்களுக்குப் புதிய மருந்துகள் கண்டுபிடித்தல்

***36019—திரு. உ. பலராமன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

சித்தா; ஆயுர்வேதா, ஹோமியோபதி போன்ற மருத்துவத் துறைகளில் நோய்களுக்குப் புதிய மருந்துகள் கண்டுபிடித்து அரசு என்னென்ன சாதனைகள் புரிந்துள்ளது?

[1995 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதிய மருந்துகள் எதுவும் கண்டுபடிக்கப்படவில்லை. ஆனால் மருந்துகள் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மருத்துவத் துறையில் சித்தா, ஆயுர் வேதிக், ஹோமியோபதி என்று பல மருத்துவ துறைகள் இருந்தாலும் இதுவரை புதிய மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இங்கே மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சியில் இந்த சித்தா, ஆயர்வேத மற்றும் ஹோமியோபதி மருத்துவர்கள் எல்லாம் அலோபதி மருந்துகளை உபயோகப்படுத்துவதற்குத் தடை விதிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய மருத்துவத்தை பொறுத்தவரையில் ஏறத்தாழ எல்லா நோய்களுக்குமே அலோபதியில் இல்லாத சில நோய்களுக்குக் கூட மருந்துகள் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன். குறிப்பாக தமிழகத்திலே அலோபதி மருந்துகள் நிறைய அளவிலே கிடைக்காத அந்த நிலையிலே இந்த மருந்துகள்தான் அன்றைக்கு இருந்து பொதுமக்களை காப்பாற்றி இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதேபோல மருந்துகள் புதியதாக கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கையை நாம் எடுத்துக்கொண்டு இருக்கிறோம். எய்ட்ஸ் போன்ற நோய்கள் புதியதாகத் தோன்றியிருக்கின்றன. எனவே அதற்கு இப்பொழுது புதியதாக ஆய்வு செய்து சித்த மருத்துவ முறையிலேதான் அதற்கு மருந்துகள் கண்டுபிடிக்கமுடியும் என்ற ஒரு நிலை கூட இருக்கிறது. அதற்கான நடவடிக்கையை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அலோபதி மருந்தை நிச்சயமாக மற்றவர்கள் யாரும் பயன்படுத்தக்கூடாது. அலோபதி டாக்டர்கள் தான் பயன்படுத்த வேண்டும். அதேபோல் சித்த மருத்துவத்தையோ அல்லது மற்ற யுனானி, அலோபதி டாக்டர்கள் அவர்களாக பயன்படுத்திவிடக் கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே அறிவுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். யார், யார்,எதிலே தேர்ச்சி பெற்று இருக்கிறார்களோ, அவர்கள் அதிலே உள்ள மருந்தைத்தான் உபயோகப்படுத்தவேண்டும். அவர்கள் தாங்கள் எந்தவகையிலே "ட்ரீட்மெண்ட்" கொடுக்கவேண்டும் என்பதிலே இந்த அரசாங்கம் நிச்சயமாக மிகக் கடுமையாக இருக்கிறது. எனவே, இந்த

நேரத்திலே வேண்டுகோளாக வைத்துக் கொள்வது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது மொத்தமாக எல்லோரையும் குறிப்பிடுவதுபோல் அமைந்துவிடுமோ என்ற காரணத்தினால் நான் இதைச் சொல்கிறேன். எங்காவது சில பேர் இப்படிச் செய்கிற காரணத்தினால் மொத்தமாக இந்தத் துறைக்கே கெட்ட பெயர் வருகிறது. எனவே அந்தந்தத்துறையிலே பயிற்சி பெற்றவர்கள் அந்தந்த மருத்துவப் பணியையே செய்யவேண்டும் என்று என்னுடைய வேண்டுகோளை இங்கே வைக்க விரும்புகிறேன். எனவே யார் மாற்றி செய்தாலும் அது தவறு என்ற வகையிலே அரசாங்கம் உரியபடி சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது டாக்டர்களிடத்திலே வாங்கி உண்ணுகின்ற மருந்துகளில் மாற்றி ஏதாவது கொடுத்துவிட்டால் உடனே அவர்களுக்கு உடல்நிலை பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆனால் சித்த, ஆயுர்வேத மருந்துகளில் அப்படி எந்தவொரு சூழ்நிலையும் இல்லை. இன்றைக்கு ஆஸ்துமா, சர்க்கரை வியாதிக்கு உள்ளாகின்றவர்களுக்கு கூட நீண்ட கால நோய்களை குணப்படுத்துகின்ற மருந்துகள் சித்த, ஆயுர்வேத மருந்துகள் இன்றைக்கு நிறைய இருக்கின்ற காரணத்தினால் அதை ஊக்கிவிடும். தமிழகம் முழுவதும் மக்கள் அதையே வாங்கி பயன்படுத்தி எந்த ஒரு நோயையும் விரைவில் குணப்படுத்தும் நீண்டகால தீராத நோயையும் குணப்படுத்துவதற்கு அதிகமான பணம் கொடுத்து இன்றைக்கு டாக்டர்களிடத்தில் அளிக்கின்ற செலவுகள் செய்வதை தடுக்கின்ற விதத்திலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவத்தை பொறுத்தவரையில் எந்த “ சைடு எபக்ட்டும்” இல்லாமல் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும். எனவே பொதுமக்கள் அதை ஆர்வமாக பயன்படுத்தி வருவார்களேயானால் நிச்சயமாக ஒரு நல்ல எதிர்காலம் உருவாகும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. இன்னும் பல நோய்களை அறுவை சிகிச்சை இல்லாமலேயே கூட குணப்படுத்திவிட முடியும் என்கிற வாய்ப்பு எல்லாம் அதிலே இருக்கிறது என்று சொல்கிறார்கள். அரசாங்கத்தை பொறுத்தவரையில் அந்தத் துறையை பயன்படுத்தி அதிலே இருக்கின்ற மருந்துகளை வெளியே கொண்டு வருவதற்காகவும் அந்த மருந்துகளை முழுமையாக மக்கள் பயன்படுத்துவதற்காகவும்

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

நிறைய முயற்சிகளை நாம் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். இருந்தாலும்கூட பரம்பரை வைத்தியர்கள் என்று சொல்லக்கூடிய திறமைமிக்க வைத்தியர்கள் தாங்கள் தெரிந்து வைத்திருந்த இரகசியங்களை அதிக அளவிலே வெளியிடாமலே சிலர் போய்விட்ட காரணத்தினாலே இப்போது அதை முழுமையாக நாம் வெளியே கொண்டு வரமுடியாத நிலை இருக்கிறது. இருந்தாலும் கூட இப்போதும் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிற பரம்பரை வைத்தியர்களையும் இப்போது படித்துவிட்டு வருகிற அந்த மருத்துவர்களையும் வைத்து அந்த மருந்துகளை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிச்சயமாக மக்கள் அதை ஆர்வமாக ஏற்று வருவார்களானால் இது வெற்றிகரமாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் அதாவது திருவல்லிக்கேணியில், திருவல்லிக்கேணி ஹைரோட்டில் மதனி என்ற ஒரு டாக்டர் இருக்கிறார். அவர் மஞ்சள் காமாலைக்கு நல்ல விதத்தில் மருந்து கொடுக்கிறார். பில்ஸ்-ம் கொடுக்கிறார். இன்ஜெக்ஷனும் போடுகிறார். அங்கே எக்கச்சக்கமான க்யூ நிற்கிறது. ஒரு நாளில் கிட்டத்தட்ட ஆயிரம் பேர் அங்கே நிற்கிறார்கள். அவர் அந்த மருந்து ரகசியத்தை யாருக்கும் சொல்லவில்லை என்று நினைக்கிறேன். அதை அவரிடத்திலே கேட்டு வாங்கி மற்றவர்களுக்கும் ட்ரீட்மென்ட் கொடுத்தால் நன்றாக இருக்கும். அப்படி செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் இதற்காக எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக்கொண்டு இருக்கிறது. ஆனால் சில இரகசியங்களை யாரும் சொல்லாமல் விட்டுவிடுகிறார்கள். அப்படி சொல்கிறபோது அவர்களுக்குப் பாதிக்கப்படுமோ என்கிற எண்ணம் அவர்களுக்கு ஏற்படுகிறது. ஆனால் பொது நோக்கத்திற்காக அதை அவர்கள் வெளிக் கொணர வேண்டும். அப்படி அவர்கள் எல்லோருக்கும் தெரிகிற வகையில் செய்தால்தான் இந்திய மருத்துவத்திற்கு மக்கள் வருகிற ஒரு ஆர்வம் ஏற்படும். ஆனால் என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால் அவர்கள் தங்களுடைய வைத்தியமுறை என்னவோ, எதற்கு அவர்கள் கற்று இருக்கிறார்களோ அதைத்தான் அவர்கள் செய்யவேண்டும். ஹோமியோபதி படித்திருந்தால்

1995 ஏப்ரல் 7]

ஹோமியோபதி ட்ரீட்மென்ட் மட்டும்தான் கொடுக்கவேண்டும். சித்த மருத்துவம் கற்றிருந்தால், சித்தா ட்ரீட்மென்ட் மட்டும்தான் கொடுக்க வேண்டும். அலோபதி ட்ரீட்மென்ட்-க்கு அவர்கள் கண்டிப்பாக போகாமல் இருந்தால்தான் உரிய பெருமை அவர்களுக்கு கிடைக்கும் அப்போதுதான் அதில் முழு வெற்றியை அவர்கள் பெற முடியும். இல்லை என்றால் அதிலே மக்களுக்கு நம்பிக்கை ஏற்படாது. அந்த வகையில் அதைச் செய்தால் சிறப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.பி. ராஜு.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழ்நாட்டில் இயற்கையாகவே அருமையான மூலிகைகள் இருக்கின்ற காரணத்தால் இந்த சித்தா, ஆயுர்வேத வைத்தியங்களின் மூலமாக புற்று நோயைக் குணப்படுத்துகிற மருந்துகள் கண்டுபிடிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னேன். சித்த மருத்துவர்கள் மற்றும் அலோபதி மருத்துவர்கள் ஆகிய இரண்டு துறை மருத்துவர்களும் சேர்ந்து ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எய்ட்ஸ் நோய்க்கு மட்டுமல்லாமல் கேன்சர் வியாதிக்கும் மருந்து கண்டுபிடிப்பதற்கான முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பல இடங்களில் இருந்து தகவல் வருகிறது. சித்த முறையிலே திறமையான முறையிலே பலபேருடைய கேன்ஸர் வியாதிகள் குணப்படுத்தப்பட்டிருக்கின்றன என்று தகவல் வருகிறது. சில பத்திரிக்கைகளில் கூட எழுதி இருந்தார்கள். ஆனால் அவர்கள் பெரிய அளவில் இவ்வாறு செய்திருக்கிறோம் என்று சொல்லி அவர்கள் முன்வருவதில்லை. நான் கூட இந்திய மருத்துவத் துறையில் சில முன்னேற்றங்கள் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக மிகப் பிரபலமான மருத்துவர்களை எல்லாம் அழைத்து ஒரு கூட்டம் போட வேண்டும் என்று சொல்லி ஏற்பாடு செய்து அதன்படி அழைத்தோம். ஒருவர் கேன்ஸர் வியாதியைக் குணப்படுத்தினார் என்று என்னிடத்திலே நேரிலே சொன்னார். அவரே நோயாளியாகச் சென்றதாகவும், குணம் அடைந்ததாகவும் சொன்னார். பத்திரிக்கையிலும் செய்தி வந்தது. அவரைத் தனிப்பட்ட முறையில் நாங்கள் அழைத்து இருந்தோம். அந்தக் கூட்டத்திற்கு அவர் வரவில்லை. எனவே அந்த மருத்துவ முறையை பரவலாகச் செய்வதற்கு அவர்களால் உதவி செய்ய முடியுமா என்று அவர்களிடம் கேட்கச் சொல்லி அதிகாரிகளிடத்திலே சொல்லி இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்தா, ஆயுர்வேதம், ஹோமியோபதி போன்ற மருந்துகளை அந்த மருத்துவர்கள் உபயோகிக்காமல் தவறான மருத்துகளை நாட்டு மருந்து என்று சொல்லி உபயோகப்படுத்துகிறார்கள். திடீர் என்று சூட்டு கோட்டு போட்டுக்கொண்டு ஆங்கில மருந்துகளையும் அவர்கள் உபயோகப்படுத்துகிறார்கள். ஊசி போடுகிறார்கள். சில மருந்துகளைச் சாப்பிட்டால் பத்தியம் இருக்க வேண்டி இருக்கிறது. அவ்வாறு பத்தியம் இருக்கவில்லை என்றால் கை, கால் விளங்காமல் போய்விடுகிறது. ஆகவே இந்த சித்த மருத்துவம் மற்றும் ஹோமியோபதி மருத்துவம் போன்றவற்றைப் பொறுத்தவரையில் ஒரு குழு மாதிரி அமைத்து, அவர்கள் போய் விசிட் செய்து நல்ல மருந்துகளைத்தான் கொடுக்கிறார்களா என்ற வகையில் சோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா? நல்ல தரமான மருந்துகள் கொடுக்கப்படுமா? ஏனென்றால் நன்றாக இருப்பவர்களைக் கூட கெடுத்துவிடுகிறார்கள் இந்த நாட்டு வைத்தியர்கள். எனவே இதிலே கவனமாக இருந்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் கொஞ்சம் பார்த்து அவர்களிடத்திலே போக வேண்டும். உண்மையிலேயே அவர்கள் வைத்தியர்கள் தானா என்று தெரிந்து போகவேண்டும். யாரிடத்திலாவது போய் ட்ரீட்மென்ட் எடுத்துக்கொண்டு பிறகு அரசாங்கம் என்ன செய்துகொண்டிருக்கிறது என்று கேட்டால் சரியாக இருக்காது. எனவே நாட்டு வைத்தியர்களைப் பொறுத்தவரையில் பலபேர் பரம்பரை வைத்தியர்கள் என்ற முறையில் மிகச் சிறந்த வைத்தியர்களாக இருக்கிறார்கள். அவர்களை நாம் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது. ஆனால் சில பேர் போலியாக, நாட்டு வைத்தியர் என்று சொல்லி அதாவது யாரோ அவர்களுடைய முன்னோர்கள் வைத்தியர்களாக இருந்து இருப்பார்கள், அதை முறையாகக் கூட கற்றுக் கொள்ளாமல் இன்றைக்கு ஒரு தொழிலுக்காககூட அதைச் செய்யக்கூடியவர்கள் இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் மீது நாம் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் இந்த சித்த முறை மற்றும் இந்திய மருத்துவ முறைகள் என்பவை மிகச் சிறப்பான முறைகள் என்பதில் யாருக்கும் எந்தச் சந்தேகமும் இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. ஆனால் அதை முறையான அளவிற்கு நாம் வளர்க்காமல் பயன்படுத்துவது தவறு என்று நான் கருதுகிறேன். இப்பொழுது நம்முடைய அரசு வந்த பின்னாலே டாக்டர் புரட்சித்தலைவர்

1995 ஏப்ரல் 7]

எம்.ஜி.ஆர். காலத்திலேயிருந்து இன்றைக்கு வரை அந்தத் துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வளர்த்து வருகிறோம். எனவே, நான் தெரிவித்துக் கொள்வது இந்தத் துறையிலே பயிற்சி பெற்ற மருத்துவர்கள் மற்ற மருந்துகளை பயன்படுத்தக்கூடாது என்று திட்டவட்டமாக அவர்கள் இருக்கவேண்டும். அதிலே அரசாங்கம் மிகக் கண்டிப்பாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சித்த ஆயர்வேத முறையிலே இருக்கின்ற பரம்பரை வைத்தியர்கள் பற்றி கூறினார்கள். அந்த பரம்பரை வைத்தியர்களைக் கொணடு சித்த வைத்திய முறையில் ஆராய்ச்சி மையம் ஏதும் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து இருக்கிறார்களா? அப்படி எந்தெந்த இடங்களில் நடத்தப்பட்டு இருக்கிறது.? பொதுவாக இந்த எய்ட்ஸ் மற்றும் புற்று நோய், ஜான்டீஸ் போன்றவைகளுக்கு இந்த சித்த ஆராய்ச்சி முறையில் இருக்கின்ற மருந்துகள் இப்பொழுது மிகவும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. அதில்தான் குணமும் ஆகின்றது. ஆகவே இதனை சிறந்த முறையிலே கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு முன்னுரிமை கொடுத்து ஆராய்ச்சி மையம் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா, எடுத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டு இருக்கிறது. பொது மருத்துவமனையிலும், தாம்பரம் மருத்துவமனையிலும் இதற்காக ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டு ஆராய்ச்சி நடந்து கொண்டு இருக்கிறது. அந்த மருத்துவர்களை நான் அழைத்துக் கேட்டபோது, அவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக எங்களால் கண்டுபிடிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது, அந்த அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். இருந்தாலும் முழுமையான அந்த ஆராய்ச்சி முடிந்து அது தெரிவிக்கப்படாமல் அதாவது ப்ரூவ் பண்ணாமல் வெளியிலே சொல்வது சரியாக இருக்காது என்ற காரணத்தால் சொல்லவில்லை. ஆனால் ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அதிலே யார் எந்த மருத்துவராக இருந்தாலும், எங்கே இருந்தாலும் தனிப்பட்ட முறையிலே இதற்கு ஏதாவது மருந்து கண்டுபிடித்து இருப்பார்களேயானால், அதைச் சொன்னால் அரசாங்கம்

அவர்களுக்கு என்ன உதவி வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராம. இராமநாதன்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது சித்த மருத்துவத்தைப் பயன்படுத்துகிறவர்கள் அதிகமாகப் பதிவினை செய்து சான்றிதழ் வழங்கவேண்டுமென்ற ஒரு கோரிக்கையினை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் இதற்கு துரித நடவடிக்கை எடுத்து சித்த மருத்துவதுறையை மீண்டும் மிகச் சிறந்த முறையிலே உருவாக்குவதற்கு முயற்சி செய்து, அதிலே நல்ல விதத்திலே வந்து கொண்டிருப்பவர்களைப் பதிவு செய்து அவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வார்களா என்பதை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இந்த புனித ஆட்சியிலே அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரியிலே படித்து பட்டதாரிகளாக வெளியிலே வருகின்றவர்களுக்கு பதிவு செய்வதிலே எந்தத் தடையும் இல்லை. எப்படி எம்.பி.பி.எஸ். படித்தவர்களுக்கு செய்கிறோமோ அதேபோல இந்த சித்த மருத்துவ பட்டப் படிப்பு படித்தவர்களும் பதிவு செய்து கொள்கிறார்கள். ஆனால் பரம்பரை வைத்தியர்கள் அவர்கள் பதிவு செய்து அவர்களே ஒரு லிஸ்ட் ஆக எடுத்துக்கொண்டு அதை அறிவிக்கப்பட வேண்டும். அங்கீகரிக்கப்படவேண்டுமென்று ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. அந்த கோரிக்கையும் ஏற்றுக்கொண்டு இப்போது அவர்களுடைய பதிவு நடந்துகொண்டிருக்கிறது; அதற்குக் கால அவகாசம் நீட்டிக்க வேண்டுமென்றுகூட அவர்கள் கேட்டு, அதிலே ஒரு முறை வைத்து, அதாவது ஒரு தேர்வைப் போல வைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களைப் பரிசோதிப்பதற்காக ஒரு தேர்வை வைத்து அந்த லிஸ்ட்டை அங்கீகரிக்க வேண்டுமென்று அவர்கள் மத்தியிலேயே கேட்கப்பட்டு இருக்கிறது. இப்பொழுது அந்த அங்கீகாரத்திற்கான லிஸ்ட் நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதை எப்படி அங்கீகரிப்பது, எப்படி அறிவிப்பது என்பது பற்றி முடிவு எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 265, டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.